பின்னூட்டல் செயற்பாட்டுப் பத்திரம் - 01

# சைவநெறி



தேர்ச்சி மட்டம்: 1.0

தேர்ச்சி: கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்தல்

க.பொ.த. சாதாரண தர உதவிச் செயற்பாட்டுப் பத்திரம்

சமயம் மற்றும் விழுமியக் கல்விக் கிளை

கல்வி அமைச்சு

2024

**பயிற்சிக் கையேடு – 01** **நேரம்: 01.30 மணித்தியாலம்**

1. கடவுளைப் பரம்பொருள் எனக் குறிப்பிடுவதன் காரணம் யாது?
…………………………………………………………………………
…………………………………………………………………………

2. கடவுளின் இரு நிலைகளும் எவை?
…………………………………………………………………………
…………………………………………………………………………

3. குணாதீதர் என்பதன் பொருள் யாது?
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………

4. இறைவனின் எண் குணங்கள் எவை?
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………

5. கடவுள் என்பதன் பொருள் யாது?
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………

6. சமய தத்துவ நூல்களில் காணப்படும் மூன்று பிரமாணங்களும் எவை?
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………

7. இறைவன் ஆன்மாக்கள் உய்வடையும் பொருட்டு எவற்றைப் படைக்கின்றார்?

……………………………………………………………………………

……………………………………………………………………………

8. ஆசாரத்தின் இரு வகைகளையும் குறிப்பிடுக

……………………………………………………………………………

……………………………………………………………………………

9. சுவாமி விபுலாநந்தர் கூறிய இறைவன் உவக்கும் இன்மலர்கள் மூன்றும் எவை?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

10. கலைகளின் அதி தேவதை யார்?

……………………………………………………………………………

11. "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்பதன் பொருள் யாது?

……………………………………………………………………………

……………………………………………………………………………

12. ஒப்புரவு என்றால் என்ன?

……………………………………………………………………………

……………………………………………………………………………

13. சைவசமயம் கூறும் மனித விழுமியங்கள் மூன்று தருக?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

14. தியானத்தின் இரு வகைகளும் எவை?

……………………………………………………………………………

……………………………………………………………………………

15. வாய்மை எனப்படுவது யாது?

.............................................................................

.............................................................................

16. அருள் என்பது யாது?

.............................................................................

.............................................................................

17. உயர்ந்த தவம் என பாரதியார் எதனைக் குறிப்பிடுகின்றார்?

.............................................................................

.............................................................................

18. உண்மை தொடர்பாக வேதமும் உபநிடதமும் கூறும் மகாவாக்கியங்கள் எவை?

.............................................................................

.............................................................................

.............................................................................

19. உலகத்தின் கொடிய துன்பம் எது?

.............................................................................

20. ஆப்த வாக்கியம் என்றால் என்ன?

.............................................................................

.............................................................................

21. "இந்த சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" எனக் கூறியவர் யார்?

.............................................................................

22. அறநெறிப் பாடசாலைகள் அமைக்கப்பட்டதன் நோக்கம் யாது?

.............................................................................

.............................................................................

23. ஈகை என்றால் என்ன?

.............................................................................

.............................................................................

24. ஒப்புரவு எனும் செயற்பாட்டின் மூலம் செய்யப்படும் செயல்கள் எவை?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

25. வாய்மைக்கு இலக்கணமாக வாழ்ந்த இருவரும் யாவர்?

…………………………………………………………………………

…………………………………………………………………………

26. சைவத்தின் மேலான இலட்சியம் எது?

…………………………………………………………………………

…………………………………………………………………………

27. அட்டபுஸ்பங்கள் எவை?

…………………………………………………………………………

…………………………………………………………………………

28. இறைவனின் ஐந்தொழில்களை எவ்வாறு அழைப்பர்?

………………………………………………………………………..

29. பஞ்ச கிருத்தியங்களின் வடமொழிப் பெயர்களைத் தருக.

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

30. சச் சித் ஆனந்தம் எனும் மூன்று இயல்புகளைத் தொகுத்துக் கூறுவதால் இறைவன் பெறும் பெயர் யாது?

…………………………………………………………………………

31. “உள் பொருள் ஒன்றே அறிந்தவர் அதனை பலவாறு….” என்று கூறுவது எது?

…………………………………………………………………………

32. "உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படான்" என்று கூறும் நூல் எது?

……………………………………………………………………………

33. யாரைக் கண்டு இறைவன் சிரிப்பான் என்று திருமந்திரம் கூறுகின்றது?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

34. அட்டாங்க யோகங்கள் எவை?

……………………………………………………………………………

……………………………………………………………………………

35. நியமம் என்றால் என்ன?

……………………………………………………………………………

……………………………………………………………………………

36. இயமத்தில் அடங்குபவை எவை?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

37. "படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்…" என்ற பாடல் இடம்பெறும் நூல் எது?

……………………………………………………………………………

38. இறைவன் நாதரூபமாகக் காணப்படும் மூர்த்தம் எது?

……………………………………………………………………………

39. அதிகாலையில் நித்திரை விட்டெழும் பொழுது யாது கூற வேண்டும்?

……………………………………………………………………………

40. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" எனக் கூறியவர் யார்?

……………………………………………………………………………

## பின்னூட்டல் செயற்பாட்டுப் பத்திரம் - 01 – விடைகள்

1) மேலான பொருள்
2) தடத்த நிலை, சொரூபநிலை
3) குணங்கள் யாவற்றையும் கடந்தவர்
4) தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை
5) உலகத்தை கடந்தும் அதேசமயம் உலகினுள்ளும் உயிர்களுள்ளும் உள்ளவர்
6) பிரத்தியட்சம் அனுமானம் ஆப்தவாக்கியம்
7) தனு, கரண, புவன, போகம்
8) அக ஆசாரம், புற ஆசாரம்
9) உள்ளகக் கமலம், கூப்பிய கைக்காந்தள், நாட்டவிழி நெய்தல்
10) சரஸ்வதி
11) இறையுணர்வை ஏற்படுத்தாத கல்வியால் எந்தப் பயனும் இல்லை
12) மற்றவர்கள் மேல் அன்பு பாராட்டி, அரவணைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்தல்
13) அன்புடைமை, வாய்மை, பொறுமை, பணிவுடைமை, அடக்கமுடைமை, செயந்நன்றி மறவாமை
14) ஆன்ம தியானம், சிவத்தியானம்
15) உண்மை பேசுதல்
16) அன்பின் முதிர்ச்சியே அருள்
17) அன்பு செய்தல்
18) வேதம் - சத்திய மேவ ஜயதே

    உபநிடதம் - சத்தியம் வத
19) பசித்துன்பம்
20) உண்மை வாக்கியம் / நூல் அளவை
21) ஆறுமுக நாவலர்
22) ஆலயத்துடன் சேர்ந்து சமயத்தையும் விழுமியத்தையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதற்காக

23) தம்மை விட பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு கொடுப்பது
24) பொருளாதார வளம் உள்ள ஒருவன் சமுதாய நன்மை கருதி கோயில்கள், குளங்கள், நூலகங்கள், அநாதை இல்லங்கள், ஆதுலர்சாலைகள், மருத்துவசாலைகள் அமைத்தல்.
25) அரிச்சந்திரன், மகாத்மா காந்தி
26) வீடு பேறு
27) கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறுமை, இரக்கம், அறிவு, உண்மை, தவம், அன்பு
28) பஞ்சகிருத்தியம்
29) படைத்தல் - சிருஷ்டி
காத்தல் - திதி
அழித்தல் - சங்காரம்
மறைத்தல் - திரோபவம்
அருளல் - அநுக்கிரகம்
30) சச்சிதானந்தரூபி
31) வேதம்
32) திருவாசகம்
33) தீய எண்ணங்களும் தீய நடத்தைகளும் உள்ளவர்களின் வழிபாட்டை
34) இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி
35) தவம், தூய்மை, தத்துவ நூல்களைக் கற்று விளங்குதல், மனத் திருப்தி, தெய்வ சிந்தனை என்பன அமையப் பெறுதல்
36) கொல்லாமை, களவு செய்யாமை, வாய்மை, பிறர் பொருளுக்கு ஆசைப்படாமை, ஐம்பொறியடக்கம்
37) திருமந்திரம்
38) நடராஜ வடிவம்
39) சிவ சிவ
40) திருமூலர்